. 4 பக்கங்கள் . விலை ரூ. 5





# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936





www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 24.04.2026 • மலர் 04 • இதழ்: 114 • Edition : Nagercoil • 24.04.2026 • Vol : 04 • Issue : 114 • Page : 4 • Rs. 5/-

## சட்டமன்ற தேர்தல்:

# தனது வாக்கை பதிவு செய்தார் முதல்வர்

சென்னை, ஏப்.24

தமிழக சட்டசபைக்கு ஒரேகட்டமாக நேற்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. வாக்காளர்கள் தங்களது பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு சென்று நீண்ட வரிசையில் காத்திருந்து ஜனநாயக கடமை ஆற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், சென்னை தேனாம்பேட்டை எஸ்.ஐ.இ.டி கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு வந்த திமுக தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தனது வாக்கினை பதிவு செய்தார். அதன்பின்னர் அவரது மனைவி துர்கா ஸ்டாலினும் வாக்களித்தார்.

பின்னர் அதே வாக்குச்சாவடியில் துணை முதல் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அவரது மனைவி கிருத்திகா உதயநிதி, மகன் இன்பநிதி ஆகியோர் தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.




தனது மயிலாப்பூர் தொகுதியில் உள்ள ஆழ்வார்ப்பேட்டை வாக்குச்சாவடியில் வாக்களித்த முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது மனைவி துர்கா ஸ்டாலினை பாஜக வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன் சந்தித்து நலம் விசாரித்தார்.

வாக்களித்த பின் மு.க.ஸ்டாலின் செய்தியாளர்கள் சந்திப்பில், "நான் எப்படி ஜனநாயக கடமை ஆற்றியிருக்கிறோனோ, அதேபோல் தமிழக மக்கள் அனைவரும் ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும். தமிழ்நாடு வெல்லும்" என்று கூறினார்.

## சட்டமன்ற தேர்தல்: தனது வாக்கை பதிவு செய்தார்: த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன்




சென்னை, ஏப். 24

சட்டமன்றதேர்தல்:தனதுவாக்கை பதிவு செய்தார் த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன்

தமிழக சட்டசபை தேர்தல் காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

சட்டமன்றதேர்தல்:தனதுவாக்கை பதிவு செய்தார் த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன்

தமிழக சட்டசபைக்கு ஒரே கட்டமாக நேற்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த நிலையில் காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வருகிறது.

நேற்று காலை, 9 மணியளவில், ஆழ்வார்பேட்டை, சென்னை மேல்நிலை பள்ளியில், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன், 2026 தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு தனது வாக்கை பதிவு செய்தார்.

## ஜனநாயக கடமையாற்றினார் எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஏப். 24

தமிழக சட்டசபைக்கு ஒரேகட்டமாக நேற்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர்.

இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், வாக்காளர்கள் தங்களது பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்குசென்று நீண்ட வரிசையில் காத்திருந்து ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர்.



இந்தநிலையில், சேலம் மாவட்டம் சிலுவம்பாளையம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு சென்ற அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது ஜனநாயக கடமையாற்றினார். வாக்களித்துவிட்டு கை விரலில் வைக்கப்பட்ட மையை எடப்பாடி பழனிசாமி புன்னகையுடன் காண்பித்தார்.

அவருடன் அவரது மனைவி, மகன் சென்று தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ யொட்டி, தருமபுரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஏர்ரப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சியர்ரெ .சதீஸ், அவர்கள் வரிசையில் நின்று தனது வாக்கினை செலுத்தினார்.

## தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்: மனைவி குஷ்புவுடன் சென்று வாக்களித்த சுந்தர்.சி

சென்னை, ஏப். 24

தமிழக சட்டசபைக்கு ஒரேகட்டமாக நேற்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியதையடுத்து, மக்கள் அதிக ஆர்வத்துடன் தங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றி வருகின்றனர். நகரங்களிலும், கிராமங்களிலும் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர். முதியவர்கள், பெண்கள், முதல் முறை வாக்களிப்பவர்கள் உள்ளிட்ட பலரும் உற்சாகமாக வாக்குச்சாவடிகளுக்கு வருகை தந்து தேர்தல் சூழலை உற்சாகமாக்கியுள்ளனர்.



இந்த நிலையில், சென்னை மந்தவெளிப்பாக்கத்தில் உள்ள ஸ்ரீ ராஜலட்சுமி பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில், இயக்குநரும் நடிகருமான சுந்தர்சி, அவரது மனைவி நடிகை குஷ்பு மற்றும் அவர்களின் மகளுடன் வரிசையில் நின்று தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.

பொதுமக்களுடன் இணைந்து அமைதியாக காத்திருந்து வாக்களித்த இந்ததம்பதியினர், அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என வலியுறுத்தினர்.





தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701


## சட்டமன்ற தேர்தல்: தனது வாக்கை பதிவு செய்தார் சீமான்

சென்னை, ஏப். 24

தமிழக சட்டசபைக்கு ஒரேகட்டமாக நேற்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியது. வாக்காளர்கள் தங்களது பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு சென்று நீண்ட வரிசையில் காத்திருந்து ஜனநாயக கடமை ஆற்றி வருகின்றனர்.



இந்த நிலையில், சென்னைநீலாங்கரையில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்கு சென்ற நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளரும், காரைக்குடி வேட்பாளருமான சீமான் தனது வாக்கினை பதிவு செய்தார். சீமானுடன் அவரது மனைவியும் வந்து வாக்களித்தார்.

அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் சீமான் கூறுகையில், "ஜனநாயகக் நாட்டில் கடைசி கருவி வாக்குதான். அதனை நாம் எல்லோரும் பயன்படுத்த வேண்டும். வாக்களிக்காமல் இருப்பதும் ஜனநாயகத் துரோகம் தான். ஒவ்வொரு வாக்கிலும் மாற்றம் வரும்; எல்லோரும் வாக்களியுங்கள் என்பதை வலியுறுத்துகிறேன் என்று கூறினார்.

## ரஜினி முதல் விஜய் வரை..

# ஜனநாயக கடமையை ஆற்றிய திரைப்பிரபலங்கள்

சென்னை, ஏப்.24

தமிழக சட்டசபைக்கு ஒரேகட்டமாக நேற்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன.



காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியதையடுத்து, மக்கள் அதிக ஆர்வத்துடன் தங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றி வருகின்றனர். நகரங்களிலும், கிராமங்களிலும் வாக்காளர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வாக்களித்து வருகின்றனர். முதியவர்கள், பெண்கள், முதல் முறை வாக்களிப்பவர்கள் உள்ளிட்ட பலரும் உற்சாகமாக வாக்குச்சாவடிகளுக்கு வருகை தந்து தேர்தல் சூழலை உற்சாகமாக்கியுள்ளனர்.

இந்தநிலையில், காலை முதல்திரைப்பிரபலங்கள் பொதுமக்களுடன் வரிசையில் நின்று தங்களின் வாக்குகளை செலுத்தி வருகின்றனர். அந்தவகையில், யார் எந்தெந்த இடங்களில் வாக்களித்தனர் என்பதை காணலாம்.

- ரஜினிகாந்த், சௌந்தர்யா ரஜினிகாந்த் சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி
- சுதா கொங்கரா சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி
- விக்ரம் சென்னை பெசன்ட் நகர்
- சரத்குமார் சென்னை கொட்டிவாக்கம்
- சிவகார்த்திகேயன் வளசரவாக்கம்
- ஹரிஷ் கல்யாண் வளசரவாக்கம்
- இயக்குனர் அட்லீ ஆழ்வார்பேட்டை
- கென் கருணாஸ், கருணாஸ், கிரேஸ் கருணாஸ் வடபழனி
- விஜய் நீலாங்கரை
- கமல்ஹாசன் ஆழ்வார்பேட்டை
- ஆர்.ஜே.பாலாஜி கோட்டூர்புரம்
- அனிருத் ஆழ்வார்பேட்டை
- குஷ்பு சென்னை மந்தவெளிப்பாக்கம்
- ஜெய் அடையார்
- ஆரவ் அண்ணாநகர்
- கவுதம் ராம் கார்த்திக் சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி
- அஜித் திருவான்மியூர்

### வடதுப்பட்டி பகுதியில்

# முத்தாலம்மன் இந்து மேல்நிலைப்பள்ளியில் அமைதியான முறையில் நடந்த வாக்குப்பதிவு



தேனி, ஏப்.24

தேனி மாவட்டம், பெரியகுளம் சட்டமன்றத் தனித்தொகுதிக்குட்பட்ட வடதுப்பட்டி பகுதியில் அமைந்துள்ள முத்தாலம்மன் இந்து மேல்நிலைப்பள்ளியில் இன்று காலை முதலே வாக்குப்பதிவு அமைதியான முறையில் நடைபெற்றது. பொதுமக்கள் அதிகாலை நேரத்திலிருந்தே வரிசையாக வந்து உற்சாகமாக தங்களின் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர். அத்துடன், தேனி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜித் சிங் 23.4.2026 காலை சுமார் 8.00 மணியளவில் வாக்குச்சாவடிக்கு வந்து, முறையான அடையாளச் சரிபார்ப்புக்குப் பிறகு தனது வாக்கினை பதிவு செய்தார். பின்னர், அங்கு நிலவும் வாக்குப்பதிவு ஏற்பாடுகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றையும் அவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வாக்காளர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், வரிசை ஒழுங்கு, பாதுகாப்பு பணிகள் ஆகியவை சிறப்பாக செய்யப்பட்டிருந்தன. தேர்தல் அதிகாரிகள் மற்றும் காவல்துறையினர் இணைந்து வாக்குப்பதிவு சீராக நடைபெற தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர். இந்த வாக்குச்சாவடியில் எந்தவித இடையூறும் இன்றி அமைதியான சூழலில் வாக்குப்பதிவு நடைபெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பொதுமக்களும் ஆர்வமுடன் வந்து வாக்களித்து ஜனநாயக விழிப்புணர்வை வெளிப்படுத்தி வருகின்றனர்.

### கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியில்

# காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர்.செல்லகுமார், பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்



கிருஷ்ணகிரி, ஏப். 24

கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர். செல்லகுமார், பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார். காங்கிரஸ் கட்சிமுன்னாள்மாவட்ட தலைவர் தொழிலதிபர் எல்.சுப்பிரமணி பேட்டி கிருஷ்ணகிரி ஏப்ரல் 24: கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள மிட்டஹள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைபள்ளியில் இன்று காலை முதலே வாக்குப்பதிவு அமைதியான முறையில் நடைபெற்றது. பொதுமக்கள் அதிகாலை நேரத்திலிருந்தே வரிசையாக வந்து உற்சாகமாக தங்களின் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினர். அத்துடன், காங்கிரஸ் முன்னாள் மாவட்ட தலைவரும், பொதுக் குழு உறுப்பினருமான எல்.சுப்பிரமணி நேற்று காலை வாக்குச்சாவடிக்கு வந்து, முறையான அடையாளச் சரிபார்ப்புக்குப் பிறகு தனது வாக்கினை பதிவு செய்தார். பின்னர், செய்தியாளர்களிடம் பேசும் பொழுது தமிழகத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றியுள்ளார் தேர்தல் வாக்குறுதிகள் வாக்காளரிடம் மிகவும் கவர்ந்துள்ளதாகவும், மேலும் சிறப்பான ஆட்சி செய்து வரும் தமிழக முதல்வர், மீண்டும் இரண்டாவது முறையாக முதல்வராக நீடிப்பார் என்றும், அதற்கு உறுதுணையாக காங்கிரஸ் பேரியக்கத்தின் சோனியாகாந்தி, ராகுல் காந்தி, ஆகியோர் உறுதுணையாக இருப்பார்கள் என தெரிவித்தார். மேலும் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லகுமார் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்றும் தெரிவித்தார். மேலும் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பொதுமக்களும் ஆர்வமுடன் வந்து வாக்களித்து ஜனநாயக விழிப்புணர்வை வெளிப்படுத்தி வருகின்றனர்.



ஈரோடு மேற்கு தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் ஆனந்த் மோகன் தனது மனைவி ஹேமாவுடன் ஈரோடு பவர் ஹவுஸ் ரோட்டில் உள்ள கலைமகள் பள்ளியில் உள்ள வாக்கு சாவடியில் வாக்களித்து தனது ஜனநாயக கடமையை ஆற்றினார். அப்போது அவர் கூறும் போது அரசியல் மாற்றத்தை அனைத்து தரப்பினரும் விரும்புகின்றனர். எனவே தலைவர் விஜய் முதல் அமைச்சராக வர வேண்டும் என்பதற்காக மக்கள் ஆர்வத்துடன் வந்து வாக்குகளை செலுத்தி வருகின்றனர் என்றார்.

# கடலூரில் கேஸ் சிலிண்டர் வெடித்து இடித்து விழுந்த வீடு:பெண் படுகாயம்

கடலூர், ஏப். 24

கடலூர் மாவட்டம், வடலூர் ஆசிரியர் நகர், நடனசபாபதி முதல் குறுக்குத் தெருவை சேர்ந்தவர் முகமதுரபிக்(வயது55). இவர்வடலூரில்கட்டுமான இரும்பு கம்பிகள் விற்பனை செய்யும் கடை நடத்தி வருகிறார். இவரது மனைவி சாராபீவி (48). நேற்று காலை வீட்டில் சமையல் செய்து கொண்டிருக்கும் போது திடீரென கேஸ் சிலிண்டரில் கசிவு ஏற்பட்டு, வெடித்து சிதறியது. இதில் வீட்டின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. இதனால் அந்த பகுதியே புகை மண்டலமாக காணப்பட்டது. இதுபற்றி அறிந்த குறிஞ்சிப்பாடி தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர். அதோடு வீட்டுக்குள் இருந்த மேலும் 3 சிலிண்டர்களை பாதுகாப்புடன் வெளியே எடுத்து வந்தனர்.

அப்போது கட்டிடத்தின் இடிபாடுகளுக்குள் சிக்கிய சாராபீவி படுகாயமடைந்து உயிருக்கு போராடிக்கொண்டிருந்தார். அவரை தீயணைப்பு வீரர்கள் மீட்டு சிகிச்சைக்காக கடலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து வடலூர் போலீசார் விசாரித்து வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# காவல் நிலையம் அருகிலேயே மது விற்ற மளிகைக் கடைக்காரர் கைது



தூத்துக்குடி, ஏப். 24

தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை பகுதியில், காவல் நிலையம் அருகிலேயே செயல்பட்டு வந்த மளிகைக்கடையில்சட்டவிரோதமாகமதுவிற்பனை செய்த நபரை போலீசார் கைது செய்தனர்.

கழுகுமலை காவல் நிலையத்திற்கு அருகிலுள்ள ஒரு மளிகைக் கடையில் மது பாட்டில்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, இன்ஸ்பெக்டர் ஜெயலட்சுமி மற்றும் சப்இன்ஸ்பெக்டர் தமிழ்செல்வன் தலைமையிலான போலீசார் அந்தப் பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

தொடர்ந்துமேற்கொண்டகண்காணிப்பில்,காவல் நிலையத்திற்குமிகஅருகிலேயேஉள்ளஒருமளிகைக் கடையில் சட்டவிரோத விற்பனை நடைபெறுவது உறுதி செய்யப்பட்டது. பின்னர் போலீசார் நடத்திய திடீர் சோதனையில், விற்பனைக்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 39 மது பாட்டில்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதுகுறித்து கடை உரிமையாளரான கழுகுமலை வின்சென்ட் நகரைச் சேர்ந்த மாரியஜேம்ஸ் (45) என்பவரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில், மளிகைப் பொருட்களுடன் சேர்த்து மது பாட்டில்களையும் சட்டவிரோதமாக விற்றதை அவர் ஒப்புக்கொண்டதாக போலீசார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக கழுகுமலை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாங்குநேரி 290வது வாக்குச்சாவடியில் தேர்தல் புறக்கணிப்பு வாக்கு செலுத்த வந்த இளம்பெண்ணை பொதுமக்கள் தடுத்ததால் பரபரப்பு

நெல்லை, ஏப்.24

தமிழக சட்டசபைக்கு ஒரே கட்டமாக நேற்று (வியாழக்கிழமை) தேர்தல் நடைபெறுகிறது. இந்த தேர்தலில் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் போட்டியிடுகின்றனர். இந்த தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், நெல்லை மாவட்டம் நாங்கநேரி தொகுதிக்கு உட்பட்ட 290வது வாக்குச்சாவடியில், பொதுமக்கள் தேர்தல் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். பெரும்பத்து கிராமத்தில் நடந்த இரட்டைக் கொலைசம்பவம்தொடர்பாகஉரியநீதிகிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர். இதனால் அதிகாலை முதல் அந்த வாக்குச்சாவடியில் ஒருவர் கூட வாக்கு செலுத்த வரவில்லை.

இதற்கிடையில், இளம்பெண் ஒருவர் ஜனநாயக கடமையை ஆற்றுவதற்காக வாக்குச்சாவடிக்கு வந்தபோது, அப்பகுதி மக்கள் அவரை தடுத்தி நிறுத்தி அவரை அங்கிருந்து விரட்ட முயன்றனர். இதையடுத்து வாக்குச்சாவடியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார், அந்த பெண்ணை பொதுமக்களிடம் இருந்து மீட்டு வாக்குச்சாவடிக்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் போலீஸ் பாதுகாப்புடன் இளம்பெண் தனது வாக்கை செலுத்தினார். இதன் மூலம் நாங்குநேரி 290வது வாக்குச்சாவடியில் முதல் வாக்கு பதிவானது. தொடர்ந்து போலீசார் மற்றும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை சமரசம் செய்து வாக்களிக்கவைக்கும்முயற்சியில்ஈடுபட்டுவருகின்றனர்.





தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் பி பழனி யப்பன் மோளையானூர் உள்ள தொடக்கப்பள்ளியில் அமைந்துள்ள வாக்கு சாவடியில் தனது குடும்பத்தினருடன் வாக்கினைப் பதிவு செய்து, ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார்.



தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் மரகதம் வெற்றிவேல் தனது குடும்பத்தினருடன் வந்து தருமபுரி மதிகொன் பாளையம் வாக்குச்சாவடியில் வாக்கை பதிவு செய்து ஜனநாயக கடமையையாற்றினார்.



தருமபுரி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் தமிழக வெற்றிகழக வேட்பாளர் எம். சிவன் தனது குடும்பத்துடன் வந்து ஔவையார் அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்து ஜனநாயக கடமையாற்றினர்.





ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி சம்பத் நகரில் உள்ள அம்மன் மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கினை செலுத்தி ஜனநாயகக்கடமையினை ஆற்றினார்.

### குரியன்விளை இன்று

# பத்திரகாளி கோயிலில் அக்னி காவடி

களியக்காவிளை,ஏப், 24

களியக்காவிளை அருகே பாத்திமாநகர் ,குரியன்விளையில் பத்திரகாளி அம்மன் கோயில் உள்ளது. இந்த கோயிலில் இவ்வருட சித்திரை பரணி திருவிழா மற்றும் சண்டிகா ஹோமம் ஏப்ரல் 18ம் தேதி துவங்கியது. திருவிழா நாட்களில் தினமும் காலை அஷ்ட திரவிய மஹா கணபதி ஹோமம், சிறப்பு பூஜைகள், அலங்கார தீபாராதனை, மதியம் உச்சபூஜை, மாலை சிறப்பு பூஜைகள், புஷ்பாபிஷேகம், இரவு பூஜை, நடக்கிறது. ஏழாம் திருவிழாவாகிய இன்று காலை வழக்க மான பூஜைகள், புஷ்பாபிஷேகம், பஞ்சாமிர்த அபிஷேகம், ஸகஸ்ர நாம அர்ச்சனை, அன்னதானம் மாலை தேவியின் சுயம்பு எழு த்தருளல். இரவு பூஜை, தேவியின் திருசன்னதியில் அக்னி காவடி மற்றும் பூக்குழி இறங்கு தல் நிகழ்ச்சி நடக்கிறது. சோயில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தீ குண்டத்தில் வேல் குத்திய அம்மன் பக்தர்கள் தீமிதித்தல் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர். நாளை காலை நாகருட்டு, சமூக பொங்காலை, பூப்படையும், வேதாளபீடத்தில் குருதியுடன் இவ்வருட திருவிழா நிறைவடைகிறது. ஏற்பாடுகளை கோயில் நிர்வாக கமிட்டியினர் மற்றும் திருவிழா சமிட்டியினர் செய்து வருகின்றனர்.

### நாகர்கோவில் மாதிரி வாக்கு மையத்தில்

## முதன்முறையாக வாக்களிக்கும் வாக்காளர்களுக்கு பூச்செடி



நாகர்கோவில், ஏப்.24

நாகர்கோவில் மாநகராட்சி பகுதியில் உள்ள கேசவ திருப்பாபுரத்தில் அமைந்துள்ள களியங்காடு அரசு நடுநிலைப் பள்ளியில் மாதிரி வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

இதில் 4 வாக்குச்சாவடிகள் மாதிரி வாக்குச்சாவடியாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி வாக்குச்சாவடிகளை பெண்கள், ஆண் பெண்கள் (பொது) இளைஞர்கள், மாற்றுத்திறனாளிகள் நிர்வகிக்கின்றனர். இந்த வாக்கு வையத்தில் முதன்முறையாக வாக்களிக்க வரும் இளம் வாக்காளர்களுக்கு பூச்செடிகள் வழங்கப்பட்டது.

இதற்காக ஆயிரத்துக்கும்மேற்பட்டமுல்லை, பிச்சிப்பூ செடிகள் வைக்கப்பட்டு இருந்தன. முதல் முறை வாக்களிக்கும் இளம் வாக்காளர்களுக்கு அங்கு இருந்த அதிகாரிகள் பாதுகாப்பு பணியில் நின்ற போலீசார் செடிகளை வழங்கினார். பூச்செடிகளை வாங்கிக்கொண்டு வாக்காளர்கள் குழுவாக நின்று புகைப்படங்களை எடுத்து மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர்.

தொடர்ந்து அங்கு அமைக்கப்பட்டிருந்த செல்வி பாய்ண்டில் செல்பி எடுத்து சமூக வலைத்தளங்களில் படங்களை பகிர்ந்து மகிழ்ந்தனர். மேலும் குழந்தைகளை விட்டு வாக்களிக்க செல்லும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக குழந்தைகள் அழாமல் இருக்க அங்கு குழந்தைகளை கவரும்வகையில்விளையாட்டு சாதனங்கள் வைக்கப்பட்டிருந்தன. இதனால் குழந்தைகள் ஆர்வமாக விளையாடினர்.

### மேட்டுப்பாளையம் தொகுதி

## திமுக வேட்பாளர் கவிதா கல்யாண சுந்தரம் வாக்குப்பதிவு



கோவை ஏப்:24

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி, காரமடை அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக வேட்பாளர் எஸ்.எம்.டி.கவிதா கல்யாண சுந்தரம் அவர்கள் தனது கணவர் திமுக காரமடை வடக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.எம்.டி.கல்யாணசுந்தரம், மற்றும் இரு மகள்களுடன் வருகை புரிந்து தங்களது வாக்கினை பதிவு செய்து ஜனநாயக கடமையை குடும்பத்துடன் நிறைவேற்றினார்கள்.

### திருச்சி

## மூதாட்டி வாக்கை மாற்றி போட்ட தேர்தல் ஆணைய அலுவலர்

திருச்சி, ஏப்.24

திருச்சி மாவட்டம் சமயபுரத்தில், 15ஆவது வார்டைச் சேர்ந்த மூதாட்டி ஒருவர் வாக்கு செலுத்த வந்தபோது, தேர்தல் அலுவலர் அவருக்கு உதவ முயன்றார். அப்போது, மூதாட்டி விசில் சின்னத்திற்கு வாக்களிக்கக் கூறிய நிலையில், தேர்தல்அலுவலர்தவறுதலாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்ததாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து அறிந்த தவெக நிர்வாகி ஒருவர் வாக்குச்சாவடிக்குள் நுழைந்து, ஒரு கட்சிக்கு வாக்களிக்க உதவக் கேட்டால் எப்படி மாற்றிப் போடலாம் என தேர்தல் அலுவலரிடம் கோபத்துடன் கேள்வி எழுப்பினார். இதனால் அங்கு சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.





### தென்காசி தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு வாக்குச் சாவடிகளை

## தென்காசி திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் பார்வையிட்டு ஆய்வு

தென்காசி ஏப்ரல் 24

தமிழகத்தில் சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்ற நிலையில் தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் மற்றும் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன் ஆகியோர் தென்காசி தொகுதிக்குட்பட்ட குத்துக்கல்வலசை, காட்டு பாவா பள்ளி, கொடிமரம் வாக்குச்சாவடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் காலை 7:00 மணி முதல் தொடர்ச்சியாக வாக்குச் சாவடிகளை கட்சி நிர்வாகிகளுடன் சென்று பார்வையிட்டார்கள் .வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு செய்யப்பட்ட முன்னேற்பாடுகள் குறித்து கேட்டு தெரிந்து கொண்ட வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் தொடர்ச்சியாக அனைத்து வாக்குச் சாவடிகளையும் பார்வையிட்டார்.



### பேச்சிப்பாறை

## அணையை கடந்து படகில் வந்து வாக்களித்த மலைவாழ் மக்கள்

மார்த்தாண்டம், ஏப். 24

பத்மநாபபுரம் தொகுதிக்கு உட்பட்ட பேச்சிப்பாறை ஊராட்சியில் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் பழங்குடியின மக்கள் வசிக்கும் மலை கிராமங்கள் பல உள்ளது. இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர். இந்த பகுதியில் வசிக்கும் மக்கள் அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்காக பேச்சிப்பாறை அணையை கடந்து குலசேகரம் போன்ற நகர்பகுதிகளுக்கு வருவது வழக்கம். அதேபோல் ஒவ்வொரு தேர்தலுக்கும் பேச்சிபாறை அரசு பழங்குடியின உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளிக்கு படகுகளில் கட்டண செலுத்தி வந்து வாக்களிப்பது வழக்கம்.

இந்த நிலையில் தற்போது நடக்கும் தமிழக சட்டமன்ற தேர்தலில் குமரிமாவட்டநிர்வாகம் சார்பில் 100% வாக்குப்பதிவு என விழிப்புணர்வு ஏற்படுத்தியதோடு, வாக்காளர் வசதிக்காக 3 படகுகளை இலவசமாக ஏற்பாடு செய்துள்ளனர். இந்த படகுகள் மூலம் அணைக்கு மறுபக்கத்தில் உள்ள தோட்டமலை, தச்சமலை, மாறாமலை, தலப்பாறை, நடனம் பொற்றை, சின்ன முட்டுதேரி உள்ளிட்ட பல மலை கிராமங்களை சேர்ந்த வாக்காளர்கள் படகில் பேச்சுப்பாறை அணை வந்தனர். அங்கிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று பேச்சிப்பாறை உண்டு உறைவிட மேல்நிலைப் பள்ளிக்கு சென்று வாக்களித்தனர்.



### பர்கூர் சட்டமன்றத் தொகுதி

## திமுக வேட்பாளர் தே.மதியழகன் குடும்பத்துடன் வந்து வாக்களித்தார்

கிருஷ்ணகிரி, ஏப். 24

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் தே.மதியழகன் அவருடைய சொந்த ஊரான குட்டூர் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் தனது குடும்பத்தினருடன் வந்திருந்து தேர்தல் விதிமுறைகளுக்கு உட்பட்டு வரிசையில் நின்று தனது வாக்கினைபதிவு செய்து ஜனநாயக கடமை ஆற்றினார். தொடர்ந்து பர்கூர் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடிகளை காலை ஏழு மணி முதல் கட்சி நிர்வாகிகளுடன் சென்று பார்வையிட்டார். வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்குசெய்யப்பட்ட முன்னேற்பாடுகள் குறித்து கேட்டு தெரிந்து கொண்ட வேட்பாளர் மதியழகன் தொடர்ச்சியாக, சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைவரும் ஜனநாயக கடமை ஆற்றி, வாக்குப்பதிவு அதிகரிக்க கட்சி நிர்வாகிகளிடம் ஆலோசனை மேற்கொண்டார்.

## திருவண்ணாமலை; கலசப்பாக்கத்தில் வாக்குப்பதிவு இயந்திரம் உடைப்பு 4 பேர் கைது

திருவண்ணாமலை, ஏப். 24

தமிழக சட்டமன்றத் தேர்தல் நேற்று நடைபெற்று வருகிறது.அரசியல் தலைவர்கள், சினிமா பிரபலங்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பு மக்களும் ஆர்வத்துடன் சென்று வாக்களித்து வருகின்றனர். வாக்குச்சாவடிகளில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்த நிலையில், திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கத்தில் வாக்குப்பதிவு இயந்திரத்தை சுயேச்சை வேட்பாளரின் ஏஜெண்ட் ஒருவர் உடைத்ததாக சொல்லப்படுகிறது.

திரும்ப பயன்படுத்த முடியாத அளவிற்கு வாக்குப்பதிவு இயந்திரம் உடைக்கப்பட்டதால் மாற்று இயந்திரம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதையடுத்து சுயேச்சை வேட்பாளர் வெங்கடேசன் உள்பட 4 பேரை போலீசார் கைது செய்து விசாரணை செய்து வருகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும், மாவட்ட ஆட்சியரும், சம்பவ இடத்திற்கு சென்றிருக்கின்றனர். வாக்குப்பதிவு இயந்திரம் உடைக்கப்பட்டது குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மனைவி இறந்த துக்கத்தில் கணவர் தற்கொலை; தூத்துக்குடியில் சோகம்

தூத்துக்குடி, ஏப். 24

தூத்துக்குடி அருகே முள்ளக்காடு, நேருஜி நகரைச் சேர்ந்த ஜெயராம் (67) என்பவர் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜெயராம் உப்பளத் தொழிலாளியாக பணியாற்றி வந்தார். இவர் தனது மகன் பிரபாகரனுடன் வசித்து வந்தார். இவரது மனைவி விஜயகுமாரி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு புற்றுநோயால் உயிரிழந்திருந்தார். மனைவியின் மறைவுக்குப் பிறகு ஜெயராம் கடும் மன உளைச்சலில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், நேற்று மதியம் வீட்டின் மாடிக்குச் சென்று தூங்குவதாகக் கூறிவிட்டு சென்ற ஜெயராமை, மாலை நேரத்தில் அவரது மகன் பார்த்த போது, மாடியில் இருந்த ஆஸ்பெஸ்டாஸ் சீட் பொருத்தப்பட்ட இரும்புக் கம்பியில் நார் கயிற்றால் தூக்கிட்டு கொண்டிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

அருகிலிருந்தவர்களின் உதவியுடன் அவரை மீட்ட போதும், ஜெயராம் ஏற்கனவே உயிரிழந்திருந்தது தெரியவந்தது.

இதுகுறித்து தகவல் அறிந்த முத்தையாபுரம் காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து, ஜெயராமின் உடலை கைப்பற்றி உடற்கூறாய்வுக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக போலீசார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### தேர்தல் நடத்தை விதிமுறைகளை


## மீறியதாக ஒரே நாளில் 10 வழக்குகள் பதிவு

தஞ்சாவூர் ஏப்ரல் 24

தஞ்சாவூர் மாவட்டம் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக ஒரே நாளில் பத்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது தஞ்சாவூர் மாவட்டம் பாப்பா நாடு போலீஸ் நிலையம் சங்கரநாதர் குடிகாடு, ஆம்லாபட்டு, பட்டுக் கோட்டை தாலுக்கா போலீஸ் நிலையத்திற்கு உட்பட்ட கரம்பயம், வாட்டாத்திக்கோட்டை, நடுக்கா வேரி போலீஸ் நிலையத்திற்கு உட்பட்ட நடுக்காவேரி, தஞ்சாவூர் தாலுகா போலீஸ் நிலையத்திற்கு உட்பட்ட சூரியம்பட்டி, ஒரத்தநாடு, தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி, சுவாமிமலை போலீஸ் நிலையம் உள்ப்பட 10 இடங்களில் வாக்காளர் களுக்கு பணம் பட்டுவாடா செய்தது தேர்தல் விதிமுறைகளை மீறி சாலை மறியலில் ஈடுபட்டது தங்கும் விடுதிகளில் தங்கியிருந்து என 10 வழக்குகள்பதிவு செய்யப்பட்டு விசாரணைநடத்தப்பட்டு வருகிறது



தஞ்சாவூர் மாவட்டம் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு தஞ்சாவூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட கலெக்டர் மான பிரியங்கா பங்கஜம் வாக்களித்தார் தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலை கல்லூரியில் உள்ள வாக்குச் சாவடியில் கலெக்டர் பிரியங்கா பங்கஜம் வாக்களித்தார்



கோவை சூலூர் சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் என் எம் சுகுமார் வரிசையில் நின்று சூலூர் பகுதியில் உள்ள மாநகராட்சி பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

### ஈரோடு மாவட்டத்தில்

## 8 தொகுதிகளிலும் விறுவிறுப்பான வாக்குப்பதிவு

ஈரோடு ஏப் 24

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, மொடக்குறிச்சி, பவானி, பெருந்துறை, அந்தியூர், கோபி, பவானி சாகர் ஆகிய 8 சட்ட மன்ற தொகுதிகள் உள்ளன. இதில் 118 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இந்த 8 தொகுதிகளிலும் 17 லட்சத்து 59 ஆயிரத்து 157 வாக்காளர்கள் உள்ளனர். மாவட்டம் முழுவதும் 2379 வாக்கு சாவடிகள் அமைக்கப்பட்டது. இதில் பெரும்பாலான வாக்கு சாவடிகளில் காலையிலேயே விறுவிறுப்பான ஓட்டுப் பதிவு நடந்தது. ஒரு சில வாக்கு சாவடிகளில் மட்டுமே மந்தமாக இருந்தது. இந்த வாக்கு சாவடிகளிலும் வாக்காளர்களின் எண்ணிக்கை போக போக அதிகமானது. பொது மக்கள் நீண்ட வரிசையில் நின்று ஓட்டு போட்டனர். இளம் வாக்காளர்கள் அதிக அளவில் ஆர்வமாக ஓட்டு போட்டதை காண முடிந்தது. 8 சட்ட சபை தொகுதிகளிலும் நேற்று மாலை 6 மணி நிலவரப்படி சராசரியாக 90 சதவீதம் ஓட்டுகள் பதிவாகின. இருப்பினும் இறுதி கட்ட ஓட்டுப் பதிவு சதவீதம் மாவட்ட தேர்தல் அலுவலர் மூலம் தெரிவிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திருச்சி வீவி பேட் மிஷின் உடைந்ததால் வாக்குப்பதிவு பாதிப்பு



திருச்சி, ஏப். 24

திருச்சிதிருவெறும்பூர்தொகுதிக்குட்பட்டகாட்டூர் பிலோமினாள் மேல்நிலைப்பள்ளி பூத் எண் 85ல் விவி பேட் மிஷின் கீழே விழுந்து சேதமடைந்ததால் வாக்குப்பதிவு தொடங்காமல் வாக்காளர்கள் காத்திருக்கின்றனர்.

விவி பேட் மிஷினை சரி செய்ய அதிகாரிகள் வராததால் வாக்காளர்கள் அதிருப்தியில் உள்ளனர்.

## மீண்டும் ஊட்டி திரும்பிய ஒற்றை யானை பொதுமக்கள் அச்சம்



ஊட்டி, ஏப். 24

ஊட்டி பன்சிட்டி குடியிருப்பு பகுதியில் நேற்று இரவு ஆண் ஒற்றை யானை வீட்டு வாசலுக்கு வந்து அங்கும், இங்கும் நடமாடியதை பார்த்த மக்கள் வீடுகளுக்குள்ளேயே முடங்கி போயினர். விடுமுறை காலம் என்பதால் மாணவர்கள் மற்றும் பள்ளி குழந்தைகள் செய்வது தெரியாமல் திகைத்துப் போயினர். ஏற்கனவே இந்த ஒற்றை யானை ஊட்டி நகரப் பகுதியில் நடமாடி அதன் பின்னர் தொட்டபெட்டா சிகரத்துக்கு சென்று மீண்டும் அருவங்காடு வந்து தற்போது ஊட்டி திரும்பி உள்ளது. யானையின் நடமாட்டம் குறித்து பொதுமக்கள் அச்சத்தில் உள்ளதால் உடனடியாக வனத்துறையினருக்கு தகவல் கொடுத்ததின் பேரில் வன ஊழியர்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

### கோவையில்

## தெற்கு சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் வாக்களித்தார்



கோவை ஏப்:24

கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளர் செந்தில்குமார் தனது மனைவியுடன் வரிசையில் நின்று கோவை பாப்பநாயக்கன் பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் தனது வாக்கினை பதிவு செய்தார்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில்

## 8 மாதிரி வாக்கு சாவடிகள் பெண்கள் தேர்தல் பணியில் இருப்பார்கள்




தஞ்சாவூர் ஏப்ரல் 24.

வாக்காளர்களை கவரும் வகையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 மாதிரி வாக்கு சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன இவற்றில் பெண்கள் தேர்தல் பணியில் இருப்பார்கள்

தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 சட்ட சபை தொகுதிகள் உள்ளன தொகு திவாரியாக தலா ஒரு மாதிரி மற்றும் முழுமையான பெண்கள் அலுவலர்கள் பணியாற்றும் வாக்குச்சாவடி (பிங்க் பூத்) அமைக் கப்பட்டுள்ளது இந்த வாக்குச்சாவடி யில் வாக்காளர்களை கவரும் வகையில் தோரணங்கள், வாழை மரங்கள் கட்டப்பட்டு, சந்தனம், குங்குமம் போன்ற மங்களப் பொரு ட்கள் வைத்து வரவேற்பு, அளித்து வாக்களிக்க ஏற்பாடுகள் செய்து ள்ளனர்

அதன்படி தஞ்சாவூர் தொகுதியில் கரந்தை மாநகராட்சி நடுநிலைப் பள்ளி, ஒரத்தநாடு தொகுதியில் ஒரத்தநாடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, பட்டுக்கோட்டை தொகுதியில் பட்டுக்கோட்டை ஜெயலாயம் நகராட்சி நடுநிலைப் பள்ளி, பேராவூரணி தொகுதியில் சாணக்கரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, திருவையாறு தொகுதியில் திருவையாறு ஜோசப் மேல்நிலைப்பள்ளி, பாபநாசம் தொகுதியில் சக்கரப்பள்ளிஅங்கன் வாடி கட்டிடம், கும்பகோணம் தொகுதியில் கீழகொண்டையூர் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, திருவிடைமருதூர் தொகுதியில் திருவாவடுதுறை ஆதீனம் அம்பலபான தேசிகர் நடுநிலைப் பள்ளி மாதிரி வாக்குச்சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளது.

இந்த வாக்குச்சாவடிகளில் முன்பு துணிகளால் பந்தல் அமைக்கப் பட்டு தரை விரிப்பு களும் விரிக்கப் பட்டுள்ளன. இந்த வாக்குச்சாவடி களில் தலைமை அலுவலர், வாக்குப்பதிவு அலுவலர்கள், போலீஸ் துறை மற்றும் பாதுகாப்பு பணியாளர்கள் என அனைவரும் பெண்களாகவே இருப்பார்கள் இவை பிங்க் பூத் என அழைக்கப் படுகிறது. பெண் வாக்காளர்கள் குறிப்பாக முதியவர்கள் மற்றும் முதல் முறை வாக்காளர்கள் எவ்வித அச்சமும் இன்றி பாதுகாப்பாக வாக்களிக்க இது உதவுகிறது

பிங்க் பூத் க்களில் குழந்தைகளு க்கான விளையாட்டு பகுதி, குடிநீர் மற்றும் நிழற் கூடங்கள், போன்ற வை உள்ளன பெண் வாக்காளர்கள் பொதுவாக்குச் சாவடியில் நீண்ட வரிசையில் காத்திருப்பதை தவிர்க் கலாம் .இது பெண்களுக்கான அதிகார மளித்தல் மற்றும் பாலின சமத்துவத்தை வலியுறுத்துவதற்கா க தேர்தல் ஆணையத்தால் அமைக்கப்படுகிறது



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ், இஆப., அவர்கள் (22.04.2026) திருவண்ணாமலை டவுன்ஹால் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

### திருச்சி கிழக்கில் 79.32 சதவீதம் வாக்குப்பதிவு

## விஜய் சீருடையில் வாக்களித்த இளசுகள்



திருச்சி, ஏப். 24

தமிழக சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் களமாடுவது பிற அரசியல் கட்சியினரை பதபதைக்க வைத்துள்ளது. திருச்சியில் பிரச்சாரம் மேற்கொண்டால் திருப்புமுனையை ஏற்படுத்தும் என்பதால் விஜய் தனது முதல் பிரச்சாரத்தை கடந்தாண்டு செப்டம்பர் 13ஆம் தேதி திருச்சியில் தொடங்கினார். அடுத்தடுத்து பல்வேறு பயணித்திட்டங்களுக்கு வழிவகுத்த போது கரூர் சம்பவம் பெரும் முட்டுக்கட்டையை ஏற்படுத்தியது. பின்னர் சட்ட நடவடிக்கைகளுக்கு பிறகு தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் கடந்த ஏப்ரல் 2 ம் தேதி விஜய் திருச்சி கிழக்கு தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்து அன்றே பிரச்சாரம் செய்தார். பின்னர் மீண்டும் கடந்த 19ஆம் தேதி திருச்சி கிழக்கு தொகுதியில் பிரச்சாரம் செய்தார். விஜய் மூன்று முறை திருச்சி கிழக்கு தொகுதியில் வலம் வந்ததால் திருச்சியில் விஜய்க்கு பெரிய மாஸ் உருவானது.



இந்த நிலையில் 2026 சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்று காலை துவங்கியது. வாக்குப்பதிவு துவங்கிய நேரம் முதல் சற்று முன்பு வரை திருச்சி கிழக்குத் தொகுதியில் பதிவாகும் வாக்குகள் மாநிலத்தின் கவனத்தை ஈர்த்துள்ளன.

திருச்சி கிழக்குத் தொகுதியில் உள்ள பல வாக்குச்சாவடிகளில் தவெக தலைவர் விஜய் தனது பிரசாரங்களின்போது அணியும் அதே பாணியிலான வெள்ளைச் சட்டை மற்றும் காக்கி பேண்ட் அணிந்து நூற்றுக்கணக்கான தொண்டர்கள் வாக்குச்சாவடிகளுக்குத் திரண்டனர்.

ஆண்கள் மட்டுமின்றி, ஏராளமான பெண்களும் இதே போன்ற உடை அலங்காரத்தில் வந்து தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர். இது தவெக வின் 'விசில்' சின்னத்திற்கான ஒரு மௌனமான மற்றும் வலுவான ஆதரவுப் பிரசாரமாகவே அங்குப் பார்க்கப் பட்டது. காலை 11 மணி நிலவரப் படி திருச்சி கிழக்குத் தொகுதியில் 37.03% வாக்குகள் பதிவாகியிருந்தன. 1 மணி நிலவரப்படி தமிழகம் முழுவதும் 56.81% பதிவாகியுள்ள நிலையில், மாலை 5 மணி நிலவரப்படி விஜய் போட்டியிடும் திருச்சி கிழக்கு தொகுதியில் 79.32 சதவீதம் பேர் வாக்களித்துள்ளனர். மதிய வெயிலையும் பொருட்படுத்தாமல் விறுவிறுப்பாக வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்து வாக்கு சதவீதத்தை வரலாற்று சாதனையாக உயர்த்தி வருகின்றனர். மொத்தத்தில் திருச்சி மாவட்டம் முழுவதிலும் 82 சதவீதத்திற்கும் மேலான வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்துள்ளது வரலாற்று சாதனையாக அமைகிறது.

மாவட்டம் முழுவதும் பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் மாவட்ட நிர்வாகம் செய்துள்ளது. திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் போட்டியிடுகிறார் என்பதால், திருச்சி கிழக்கில் மட்டும் கூடுதல் சிசிடிவி கண்காணிப்பு மற்றும் காவல்துறை ரோந்துப் பணிகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

## இளம் தலைமுறையினர் 100% வாக்களிக்க வேண்டும் முதல் முறை வாக்காளர் ஜெட்லி சிங் பேட்டி



நாகர்கோவில் ஏப்ரல் 24

2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவில் முதல் முறையாக வாக்களிக்கும் புதிய வாக்காளர். 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் முதல் தலைமுறை வாக்காளர்கள்முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

இந்த தேர்தலில் அதிகப்படியான முதல் தலைமுறை வாக்காளர்கள் ஆர்வமாக வாக்களித்தனர். அந்த வகையில் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கங்காடியா பள்ளியில் நடைபெற்ற வாக்குப்பதிவில் முதல் முறை வாக்காளர் ஜெட்லின்சிங் தனது வாக்குப் பதிவை செய்தார். தனது வாக்கை பதிவு செய்துவிட்டு வெளியே வந்த முதல் முறை வாக்காளர் ஜென்ட்லின் சிங் தினதமிழ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது : ஜனநாயக கடமையான வாக்களிப்பது ஒரு வாக்காளராக எனக்கு மிகுந்த பெருமையாக உள்ளது. காரணம் தமிழக முதல்வரை தேர்ந்தெடுக்கும் வேட்பாளர் தேர்வில் என் போன்ற இளம் தலைமுறை வாக்காளர்களின் வாக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நான் இன்று அளித்தது வெறும் ஓட்டு இல்லை ஒரு தலைவரை தேர்ந்தெடுக்கும் நல்ல வாய்ப்பாக கருதுகிறேன். மேலும் இந்த முறை வாக்குச்சாவடிகளை நோக்கி இளம் தலைமுறையினர் அதிக அளவில் வந்த வண்ணம் உள்ளனர் இவர்களின் வருகையால் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரிக்கும் என நம்புகிறேன். இன்றைய இளம் தலைமுறையினர்,

முதல் முறை வாக்காளர்கள் ஒவ்வொரு முறையும் தேர்தல் நடைபெறும் போதும் , 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன். எங்களைப் போன்ற இளம் தலைமுறையினரின் வாக்கு ஒரு புதிய புரட்சியையும்,

மாற்றத்தின் தொடக்கத்தையும் ஏற்படுத்தும் என தெரிவித்த அவர் தமிழ் நாட்டு மக்களுக்கு எது தேவையோ அதை செய்து தரும் நல்ல அரசு அமைய என் போன்ற இளைய சமுதாயத்தினரின் வாக்கு மிகவும் இன்றியமையாததாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.